உ

ஓம்!

ஸ்ரீ கணேசாய நம

ஸ்ரீ குருப்போ நம:

15 OCT 1924

# ஸ்ரீ குருஸ்துதிகள்.

இந்த மலர்தலை உலகின்கண் மஹா அவதார மூர்த்திகளாய் அவதரித்து

எண்ணிறந்த ஜீவர்களுக்கு

"சர்வதுக்க நிவர்த்தியும் பரமாநந்த பிராப்தியாம்"

மோட்ச பாக்கியமாகிய, பிரஹ்மாநந்தத்தை

அருளினல் அநுகிரஹித்தும், அநுகிரஹிப்பவர்களுமாகிய

பரமஹம்ஸ ஸ்ரீபகவான் ஏகாம்பரதேசிக சுவாமிகள்

ஈஸ்வரி ஸ்ரீ இரத்தினம் அம்மணி தேவியார்

திருஞான செல்வர்

பிரஹ்ம ஸ்ரீ ஞானசற்குரு

ஓம் பிரகாஷ் சுவாமிகள்

52-வது வருட திருஜநன மஹோற்சவத்தன்று

ஷை மூர்த்திகளின் சேவடி தொண்டர்களால்

...ஸ்தோத்தியஞ்செய்தது

Q2:417
N24
181941

...மண்டலம், 13-8-24.

PRINTED AT THE ST. ANT... ...SS, O...

உ
ஓம்.
ஸ்ரீகணேசாய நம:
ஸ்ரீகுருப்யோ நம:

---

நீலகிரி, திருக்காந்தல்

ஓம் அசலப்பீடம்யோகேந்த்ர குரு

ப்ரஹ்மஸ்ரீ ஓம்பிரகாஸ ஸ்வாமிகளின்

52வது ஆண்டு நிகழ்ந்த

# திருஜனன வைபவச் சிந்து.

கங்கைசூழ் பெருநிலத்து—பரதக்
கண்டத்தி னிமையத்தென் வரைபுலத்தும்
கொங்குசீ தளமிசந்த—கன்யாக்
குமரித்து றையினிடைச் சிறப்புயர்ந்த

மலர்தடங் களின் மரூஉவி—அன்னம்
மதத்துப்பே டுகளுடன் சுகித்திருக்கும்
கலைத்தெழுங் கயலினங்கள்—துள்ளிக்
ககன மணுகமழைக் கரைந்திடுங்காண்

நிலமுழு திடுமுழவர்—வயற்கண்
நிறைந்தநித் திலங்களைப் பறிந்தெடுத்து
நலமகட் கணிந்திடுமால்—வேலை
நகர்தனிலே பெட் பகந்தனிலே

கடலணை மீதயருஞ்—சீத
கமல நயனனருட் பலந்தழைந்த
கொடையன்புத் திடநயஞ்சேர்—தருமக்
குலத்தனிலே வந் துதித்தவர்காண்

தருக்கம்பல் கலையுணர்ந்த—கோபால
சாமி பெரியவர் தவத்தினிலே
தெருண்மழை விழிமதிநேர்—வதனத்
திருவமராவதி யம்மையின் பால்

தக்கசீ ராடிமதி—ஸ்வாதி
தழைந்திடும் பானு வாரத்திலே
சுக்கிலப் பட்சத்திலேத்—துலங்கித்
துகளற விளங்கிடும் யோகத்திலே

ஆர்சுப கிரகங்களின்—நல்ல
ஆட்சியிலே குருக் காட்சியிலே
சீர்ப்பரஞ் சுடர்க்கொழுந்தேச்—செல்வத்
திருவுருக் கொண்டாங்கு எழுந்ததுகாண்

15 OCT 1924
294.5 ... 577

பாலப் பருவத்திலே—மழலைப்
பகர்ந்து விளையாடிப் பலருடனும்
காலங் கழித்தினிதாய்—நாளுங்
கவலையற் றிருந்தனர் களிப்புடனே

குமாரப் பருவமாங்கு—வளரு
மதியம்போ லடைந்தன பலவிதநூல்
கிராயு ணர்ந்தலுவல்—செய்து
சிறப்புடன் வாழும் நாள்விறைய

இராஜப்பருவங் கொண்டு—சோதி
இரவியென உதய கிரியனாகி
தேஜோன் மயதட்சிணா—மூர்த்தி
திகழ்மட தாபக ரெனவிளங்கும்

பரமாம்ஸ பகவன்—ஏகாய்
பாரத்ன தேவிதெய் வச்சுதனாய்
திருவருள் சாதனத்துத்—திகழ்ந்து
சிவசொரு பமெனச் சிறந்துபின்னும்

சரஸ்வதி யாச்சர்மமாம்—உ-வி
சபையென்று நிருவினர் சாஸ்வதமாய்
அரிஓம்சிவ ராமா—நந்த
அவைத் திரந்தன ரடியோர்க் கினிதாய்

தன்னையே யறியும்வகை—யதனை
தரும்பர பிரமமென ஒளிரும்
தன்னுமை வுலகாசி—மலையின்
தவ முனியிவர் சதாத் தழைத்திடுக

அஷ்ட கஜங்கள் மலையும்—புகலு
மகிலசராசர மடங்கலுமே
சிஷ்ட பரிபாலன—நடத்தும்
சித்தசித் தீஸ்வரி தாய்களுமே

திக்கெட்டுங் காத்திடுக—அயன்மால்
சிவனுமை யிபமுக னுமுப்பத்து
முக்கோடி தேவர்களும்—எங்கள்
முதல்வனை நாளுங் காத்திடுக

திருமலர் வளைகிதமும்—எங்கள்
சிந்தையில் மலர செய்திடுதி
குருஓம் பிரகாஸ—ஞானக்
குறைக்கடலே நம அருட்சுடரே

சந்ததம் வாழ்ந்திடவே—எங்கள்
சமரச போதசி காமணியே
வந்திக்கு மடியாரின்—மனதில்
வாழ்க பரதான! வாழ்கநமோ,

இயற்றியவர்

D. M. சிவபாக்கியம் பிள்ளை.

காப்பக ... சென்னை 600 008
18194
2:417
N24

உ
ஓம்!
ஓம் சரவண பவ நம:

# ஸ்ரீ சற்குருநாதர் ஸ்தௌத்தியக் கீதம்.

## காப்பு வெண்பா.

சித்தந்தி னுள்ளே சிறக்குந் தனிகுரவன்
பத்திமலர் பாடவருள் பாலிக்க—சத்தி
கரந்தாங்கு ஞானக் களிற்றுணைப் பாதஞ்
சிரந்தாங்கு வாமேத் தெரிந்து.

## எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அமுதகலை யெனவிரியு மகண்ட சோதி
யத்துவித நிலையோம்பு மறிவா கார
சமரசமெஞ் ஞானவழி தனைபுல் லேற்றத்
தருங்கருணை மழைமுகிலாய் தருவாய் தானு
யலமந்தெண்ணு மிடந்தோன்று மதீத வாழ்வா
யாருயிரா யன்பரிதக் கோயிற் கொள்ளு
மிமையாடும் பாகுருவே யெளியே னுய்ய
விணையடியைச் சிரந்தாக்கி ரட்சிப் பாயே.

—o—

இராகம்-நாராயணி. ரூபக தாளம்

## பல்லவி.

குருவே குருசரணே—கோறினே னுள்வீர்
குருவே குருசரணே.

## சரணங்கள்.

1. தருண மெணதிட ரகல நினதிரு
பாதமே யருளுதமே திரு
நிரதி சயநிலை யமரும் போதக
நினைவி லாடிடும் நிகரில் சாதக் குரு.

2. காமக் ரோதநி வாச ரட்சவ
தானியே ப்ரம ஞானியே
கவலை யறவின துபய மலரடி
கண்ணில் வாழ்ந்துய்ய பண்ணுவாய் நிதி

3. பக்தி சாதன மற்ற பாதகப்
பாவியா னுனைத் தாவி னேனையா
முக்தி மார்க்க முளையு கந்திடும்
சுத்த சைதன்ய மாக வந்திடுங் குரு.

4. விமலத் தாரக மான பிர்மசிற்
சோதியே நவ நீதியே
சமர சத்துவி தானந் தனிலே
யமருந் துங்கஸ்ரீ மாத வாகலே குரு.

5. வேத கீதசு மேத மந்திரப்
போதவா ஜெய நாதவா
சாத கவிமல ராலே சந்ததம்
பதஞ் சேவிக்கும் ராமச்சந்திரன் குரு.

வாழி சுபம் வாழி.

---o---

உ
ஓம்!
ஸ்ரீ சற்குரு நாதர் சரணா விந்தங்களே கதி.

---

# ஸ்ரீ மஹா மும்மூர்த்திகள் மீது
# நவமணி மாலை

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய மங்கல விருந்தம்.

தேரார்ந்த கங்கைசூழ் பூமீது ஜீவர்கள் ஜெனனமொடு மரணத் துன்பம்
சீரார்ந்த ஞானோப தேசமலர்ந் தோய்க்கசிவ தேசிகரா யுதித்த மூர்த்தி
வாரார்ந்த பரமேகாம் பரதேவர் பாக்கியரஸ் வரிரத்ன வம்மை தாயும்
நேரார்ந்த ஸ்ரீ ஓம்பிர காஷாடி போற்றவரு ணீடுகுஞ்ச ரப்ப னின்பே.

---o---

இராகம்-நாதநாம கிரியை ரூபகதாள

பல்லவி.

குருவே நந் தந்தைதாய் தெய்வம்—சற்
குருவே நந் தந்தைதாய் தெய்வம் —அவர்
சரணத்தை நம்பி— ஜன்மசா பல்யம்.

சரணங்கள்.

1. அருவினை அத்வமு தாட்டி—என்றன்
அகவிரு ளோட்டி அறிவொளி நாட்டி
திருவடிக் காட்கொண்டார் தேற்றி—திவ்ய
ஸ்ரீஏகாம் பரரத்ன ஓம்பிர காஷ.

2. கருவிக்க ரணநீ யன்று—கண்ட
கழறுமைங் கோஷமு நாதமு மன்று
பெருமைசேர் பிரஹ்மநீ என்று—மலர்
பெட்பேகாம் பாரத்ன ஓம்பிர காஷ குரு.

3. உலகினிற் பிறந்தலைந் துழன்று—தும்பிக்
கோதனங் தேடுவ தேதொழில் சுழன்று
மலமூன் றகற்றி தகன்று—தீட்சி
மஹாவகாம் பாரத்ன ஓம்பிர காஷ குரு.

4. மனவாக்கு காயமுஞ் சீவம்—நறு
மலரடிக் கர்ப்பண மென்னவே ஈவம்
கனதுய ரிறப்பிறப் போய்வம்—பதம்
கதிவகாம் பாரத்ன ஓம்பிர காஷ குரு.

5. சீர்நிறை தானமுந் தவமும்—மற்றுந்
திருஸ்தல தெரிசனந் தீர்த்தமும் பலமும்
பேர்பெறு தேசிக நலமும்—பேசும்
பெட்பேகாம் பாரத்ன ஓம்பிர காஷ குரு.

6. அநந்தஜென் மங்களிற் கொண்ட—பவ
மனைத்துமோர் மொழியா லகற்றிட விண்ட
அனகசே வடிகளே கண்ட—மாட்சி
அதிவகாம் பாரத்ன ஓம்பிர காஷ குரு.

7. பங்கஜ பதத்தைஓர் முறையே—பய
பக்தியு டன்பணி யத்தீருங் குறையே
இங்கித சாக்ஷிமா மறையே—வற்றும்
இருஷிவகாம் பாரத்ன ஓம்பிர காஷ குரு.

8. நவிலுநான் மறைகளும் வாக்கே—நல்ல
ஞானசுதை உச்சிஷ் டந்திருக் காக்கே
அவித்தைக்கோ ரௌஷதந் திருநோக்கே—தவ
அருளேகாம் பாரத்ன ஓம்பிர காஷ குரு.

9. சீதள பாதமே வாழி—தாஸன்
ஸ்ரீமன் திரிவேணி செய்யுளும் வாழி
சாதகர் சித்தர்கள் வாழி—போற்றி
ததிவகாம் பாரத்ன ஓம்பிர காஷ குரு.

வாழி சுபம் வாழி!

உ

ஓம்!

உலகறத் துறை நின்றுய்ய அவதரித்த புண்ணிய மூர்த்திகளாம்

ஸ்ரீ பரமஹம்ஸ ஏகாம்பர தேசிகர்

அன்னவர் சிஷ்யை உலகன்னையாம்

ஸ்ரீமதி இரத்தின அம்மணியார்

அவர்கள் ஞானச் செல்வர்

பிரஹ்ம ஸ்ரீ ஓம்பிரகாச சற்குரு ஸ்வாமிகள்

பதமலர்கட்கு

ஸ்வாமிகளின் தொண்டருளொருவரால், பக்தியின் றொடுத்துசூடிய

# பதிகமாலை.

## காப்பு வெண்பா.

ஆதி விநாயக னப்ப னருந்துணை
பாதி மதியார் பரமசிவ—மாதுமை
செல்வக் களிறு சிவப்பிழம் பாமருள்
நல்கும் பெருப்பத னூட்டு

## ஐசீர் நெடிலடி யாசிரிய விருத்தம்.

எங்கு யாவ ரெக்கணத்து யெமையுளத்துப் பரிவதாய்
தங்கு மேது வடிவினுன்னுந் தாமவர்க்க ணலமதாய்
அங்கு சேர்வ னக்கணத்தி னஞ்சனீயென் றறைந்திடும்
துங்க வாயர் தங்கிருஷ்ணன் றாயதாட்க டுணையதாம்.

## அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

1. வாழியநின் மலரடிகள் மறையுணர்ந்த
பெருமுனிவ வழுத்தி யும்மை
சூழவுநின் னருட்கருணை சுரந்தளிப்பை
யுப்பெருமை சொல்லற் பாற்றே
ஆழிநிக ரன்பிடைபே ரமுதமென
கொழித்த பெரு மணியே! முத்தே!
வாழியநின் மலர்க்கழல்கள் வாழியவக்
கழல்சிரமே வைத்தோ ரென்றும்!

2. ஒருமுதலா யுலகுணர உதிதவத்தே
காம்பரரா யோங்கு ஞானந்
தருமுதலா யறம்வளர்க்குந் தவப்பிழம்பா
யிரத்தினவம் மணிநற் றுயாய்,
குருமுதலா யத்தாயெங் குறையகல
தருமதலாய் குணமே ரென்ன
வருமுதலே குருப்பெரியாய் மறைக்கொழுந்தே
ஓம் பிரகாஷ் வள்ளலெந்தாய்!

3. பாலிருக்குந் தேனிருக்கும் பழநலங்கள்
கனிந்திருக்கும் பாகு சொட்டும்
மாலிருக்கு முலகிருக்கும் மாயைநலி
கடிதிருக்கும் மலர்வான் ஞானம்
நாலிருக்குஞ் சொல்லிருக்கும், நாயகனின்
னழகிருக்கும் நளின பாதம்
பாலிருக்குஞ் சிரமிருக்கும் பதியுமுள
ஓம்பிரகாஷ் பயந்த நாளே!

4, முன்வந்தார் ரேத்தனைபேர் மொழிவன்மை
வைவந்தார் மூன்றுந் தீர்ந்தார்,
சென்மந்தா ரவனியிலே சிறந்தகுணம்
பலவந்தார் சிந்தை செய்யின்
துன்பந்தார் பிறவியறுத் தொல்மறைக
ளொடுகலைக டோயக் கற்று
இன்பந்தா ருமைப்போல்வா ரேவருளார்
ஓம்பிரகாஷ் இனியா யெந்தாய்.

5, தூரியநிலத் தொளிர்தருவே தருகனிந்தச்
சுகக்கனியே கனியுட் டோன்றும்
பெரியநலஞ் சுவைத்தொழுகு பேரமுதே
யமுதெழுந்து பிறவிபோக்கும்
அரியதவச் சுடர்க்கொழுந்தே அனைத்திடமுந்
ததும்பநிறைந் தறிவா காயம்
விரிபடகினர் முழுப்பொருளே விசிகலையே
கலைமணைந்த விமல வாழ்வே!

6, மறைகடந்த முழுக்கடவுள் மறைபூண்டு
மறைவளர எழுந்த வாரய்
கறைகடந்த வகன்ஞானக் கரையுனடத்து
கறைதிமிர்ந்து கனிவின் மாயைத்
துறைகடந்து புவியோருந் தூரியமுற
புவிபோந்த தூய மூர்த்தி!
அறைகடந்த வும்பெருமை யருமைசொல
ஓம்பிரகாஷ் அரிய தேவே!

7. தவங்கிடக்கு மொருபொருளைத் தனிக்கிடக்கும்
பழம்பொருளைத் தவத்தி னுய்ந்து,
பவங்கிடக்கு முலகடைத்து பவமாற்றி
யிலகுமருள் பயப்ப தெம்பால்
நலங்கிடக்கு மருஞ்செயலே, நலங்கொழிக்கு
நாயகமே நறைவார் பூவே!
சிவங்கிடக்குங் குருமுதலே செழும்பாகோம்
பிரகாஷ சித்த ரெந்தாய்!

8. நூலேந்துந் தவப்பெருமா னறப்பெருமான்
நுனித்துணர்வார் நோன்பிற் றேன்றி
பாலேந்து மொழிபெருமான் பவமறுக்கும
குருபெருமான் பாதத்துணட்டம்
மாலேந்து முலகடைத்தும் மனமடைத்தும்
மகிழ்பெருமான் மதித்தோர்க் கென்றுங்
காலேந்துங் கற்பகமே கலைமணக்குந்
தமிழ்மணமே கற்றோர் மாண்பே!

9. மறையார்ந்த கலையுடையாய் நீறுடையாய்
மதியுடையாய் மலரு ஞானத்
துறையோர்ந்த சொல்லுடையாய்த் துரியமுறு
முறமுடையாய் சொல்லற் கொண்ணு,
பொறையார்ந்த மனமுடையாய் குணமுடையாய்
புகழ்மலிந்த புனித மேவும்,
முறையார்ந்த நெறியோர்ந்த முழுப்பொருளே
தொழுப் பிரகாஷ யொழிதல்என்னே!

10. ஒருசாமி யெனவுலக மொருங்கேற்றும்
ஓம்பிரகஷ இனிய சாமி
குருசாமி வினையறுக்குங் குலசாமி
பலமதத்தின் குலமை நாட்ட
வருசாமி தவசாமி வழுத்திடுவார்க்
கருள்ஞானம் வழங்கி முத்தி
தருசாமி யடியருளந் தழைசாமி
பழம்பொருளாய்த் தழைக்குஞ் சாமி.

---

வாழி விருத்தம்.

கர்ந்தி சிந்துதவ எகாம் பரகுருவாந் தோன்றல்
கழலிணைகள் வாழியே
[illegible] இரத்ன தேவி தாயவர்க திவ்ய
[illegible] இணையடிகள் வாழியே
சாந்த குன்று திரு ஓம்ப்ர காஷகுரு சாமி
தவக்கழல்கள் வாழியே
மாந்த ருக்குக் பக்தி புகட்டுசுப்ர தீப
மகிபதடி வாழியே.

ஓம், தத், ஸத்.

[illegible] காப்பக [illegible] சென்னை-600 008
18144